

# FRIDAY SERMON

15 MARCH 2019

(07 RAJAB 1440 AH)

HADHRAT MUHYI-UD-DIN AL-KHALIFATULLAH
MUNIR AHMAD AZIM

## "ISLAMIC TERRORISM"

## "இஸ்லாமிய பயங்கரவாதம்"

**TAMIL VERSION / தமிழ் பதிப்பு**

சலாமிற்கு பிறகு தஷஹ்ஹுதும், தஅவசும், அல்.ஃ.பாத்திஹாவும் ஓதிக்கொண்டு **ஹஸ்ரத் கலீ.ஃ.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் தம் ஜுமா பேருரையினை ஆரம்பித்தார்.

"இஸ்லாமிய பயங்கரவாதம்" என்னும் வார்த்தை இன்று ஒவ்வொருவரின் உதடுகளிலிருந்தும் வெளிவருவதை காணலாம். சிலர் இஸ்லாமிற்கு எதிராக தங்களது வெறுப்பைத் தணிப்பதற்கு இவ்வாறு கூற விரும்புகின்றனர். இன்று உலகில் மிக பெரிய காரியமாக இஸ்லாமிய பயங்கரவாதத்தை மேற்கு நாடுகள் விவாதித்து வருகின்றது. எழுத்து, பத்திரிக்கை, விவாதம் மற்றும் தொலைகாட்சி போன்ற மீடியோக்கள் வழியாக இக்காரியத்தை அவர்கள் மேலும் கொதிக்கவைக்கின்றனர். இஸ்லாமிய பயங்கரவாதத்தைக் குறித்து ஊடகங்களில் செய்தி வராமல் ஒருநாள் கூட கடந்து செல்வதில்லை. இஸ்லாமிய பயங்கரவாதம் மற்றும் மத தொடர்புடைய பயங்கரவாதங்களைப் பற்றிய

விவாதங்கள் ஒவ்வொரு நாளும் எழும்புகின்றது. இஸ்லாமிய சமூகத்திலும் பிற சமூகத்திலும் இந்த மத பயங்கரவாதத்தின் தகுதி குறித்து விவாதங்கள் இன்று தொடர்கிறது. இஸ்லாமுடன் தொடர்புடைய எல்லாவற்றையும் பற்றிய அவர்களின் வெறுப்புணர்வுகள் காரணமாக, அதன் மீதான பகைமையை அதிகரிக்க வைப்பதும், இந்த மத நம்பிக்கையை முழுமையாக கண்டிப்பதும், மற்றும் இதைக் குறித்து தெரியாதவர்களின் பார்வையில் இதன் தீய முகத்தினை காண்பிப்பதும் இன்றய ஊடகங்களில் குறிப்பான நோக்கம் என்பதில் சந்தேகமில்லை.

இது வரையில், உலகளவில் இது குறித்து ஏராளமான மாநாடுகள், விவாதங்கள், மற்றும் கூட்டங்களை அவர்கள் ஏற்பாடு செய்தனர். ஆனால் செவிடர்களின் இந்த உரையாடலின் விளைவாக அமைதி, அன்பு மற்றும் சகிப்புத்தன்மை ஆகியவற்றின் ஒரு சிறு அடையாளம் கூட அடிவானத்தில் தோன்றவில்லை என்பது கவலைக்குரியதாகும்

இஸ்லாமை இழிவுபடுத்துபவர்கள் இந்த வெறுப்பை ஊடுருவி வருகின்றார்கள். என்றென்றுமாக முஸ்லீம்கள் முடிவடையும் ஒரு நாளினை அவர்கள் கனவு காண்கின்றனர். மறுபுறம் இஸ்லாமிய அதாவது முஸ்லீம்களாகிய சில பயங்கரவாதிகள் சறண்டறாக தயிராராகயில்லை. அவர்கள் தங்களை ஒருங்கிணைத்து ஆயுதங்கள் கொண்டு பதிலடிக்க தயாராகின்றனர். இவையனைத்தும் முட்டாள்தனமான செயல்களாகும். இங்கு கூறப்பட்ட இஸ்லாமிய பயங்கரவாதிகளைக் குறித்து ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமின் கருத்து என்ன என்பதை ஒவ்வொருவரும் கவனிப்பது மிக நன்றாகயிருக்கும் என்று நான் எண்ணுகிறேன். ஏனெனில் இது, விடியற்காலையிலிருந்து இரவுவரையில் உலகம் விவாதித்து வரும் ஒன்றல்லவா!

**இஸ்லாமிய பயங்கரவாதம் என்பதற்கு அவர்கள் எந்த அர்த்தம் வழங்குகின்றனர் என்பதை எண்ணி உண்மையில் நான் வருந்துகின்றேன். இஸ்லாம் என்றால் பயங்கரவாதம் என்று கூறுவது ஒளியை இருள் என்று கூறுவதைப் போலாகும். வாழ்க்கையை மரணம் என்று கூறவதைப் போலாகும் அமைதியை போரா் என்று கூறுவதைப் போலாகும்,** இவ்வாறிருப்பினும் முஸ்லீம்கள் பயங்கரவாத செயல்களில் ஏற்பட்டிருந்தனர் என்பது மறுக்க

முடியாத ஒன்றாகும். பல சூழ்நிலைகளில் அவர்கள், ஒரு முஸ்லீம் பிரிவினர்களுக்காகவோ, இராஜியத்திற்காகவோ பயங்கரவாத செயல்களில் ஈடுபட்டிருக்கலாம். ஆனால் பிற பிரிவினர்கள் உலகெங்கும் பயகரவாத மற்றும் தீவிரவாத செயல்களில் ஈடுபட்டதில்லையா? சற்று கற்பனை செய்து பாருங்கள் அதாவது **இந்த தத்துவத்தைக் குறித்து நாம் ஆராய்வோமேயானால், இஸ்லாமிய பயங்கரவாதம் என்ற இதே வார்த்தையினை மற்றேதேனும் பயங்கரவாதமானாலும் சரி அதற்கும் பயன்படுத்த வேண்டுமல்லவா? உதாரணமாக சிக்கு பயங்கரவாதம், ஹிந்து பயங்கரவாதம், கிறிஸ்தவ பயங்கரவாதம், நாத்திக் பயங்கரவாதம், புத்த பயங்கரவாதம், ஆன்மாவாத பயங்கரவாதம், மற்றும் சிலை வணக்க பயங்கரவாதம், என்றெல்லாம் பயன்படுத்த வேண்டுமல்லவா?**

துரதிர்ஷ்டவசமாக உலகின் ஒவ்வொரு மூலையிலும் வளர்ந்து வரும் பயங்கரவாதத்தை கண்டுகொள்ளாமலிருக்க முடியாது. ஏதேனும் ஒரு இலட்சியத்தின் அல்லது ஏதேனும் உன்னதமான காரணத்தின் பெயரில் உலகில் நிகழ்ந்து வரும் துன்புறுத்தல்கள், இரத்தக்களரி மற்றும் கொலைகளை ஒரு பார்வையாளருக்கு கண்டுகொள்ளாமலிருக்க முடியாது. பயங்கரவாதம் என்பது ஒரு உலகளாவிய பிரச்சனையாகும். அதன் விளைவு மிக பெரிய ஒன்றாகும். அதனை நாம் மிக கவனமாக பரிசீலிக்க வேண்டும்.

இத்தகைய வன்முறையின் பின்னால் செயல்படும் சக்திகளை நாம் பகுத்தறிந்துக் கொள்ளமலிருந்தால், சில குறிக்கோள்களை அடைய சில முஸ்லீம் குழுக்கள் மற்றும் இராஜியங்கள் எதற்காக பயங்கரவாதத்திற்கு திரும்புகின்றனர் என்பதைக் குறித்து நமக்கு புரிந்து கொள்ள முடியாது. இன்று உலகில் நிகழும் அனைத்து வகையான சமூதாய வன்முறைகளும் அதன் இயல்பு எவ்வாறிருந்தாலும் சரி, அவை எங்கு நிகழ்ந்தாலும் சரி அதன் பின்னால் ஒரு அரசியல் நோக்கம் உண்டு என்று நான் முழுமையாக நம்புகிறேன். அதன் பின்னால் செயல்படுவது அதிகார ஆசை மற்றும் தாகத்தைக் கொண்ட அரசியல்வாதிகள்தான். அவர்களின் உள் மற்றும் வெளிப்படையான அரசியல் நலன்களுக்காக மக்களையும், நாடுகளையும், மதங்களையும் பிளவுபடுத்துகின்றனர். அவர்களுக்கு இடையே பதட்டங்களையும், போர்களையும் உருவாக்குகின்றனர். இவ்வாறு செய்வதன் மூலம் மக்களை எளிதில் தங்களது

கரங்களுக்குள் கட்டுபடுத்திவைக்க முடியும் என்று அவர்கள் நினைக்கின்றார்கள். அது வழியாக ஒரு நம்பிக்கையையோ அல்லது கூட்டத்தினரையோ எந்த சிக்கலுமின்றி, எளிதாக அழித்து விட முடியும் என்று அவர்கள் எண்ணுகின்றனர்.

உதாரணமாக, இனவெறியால் ஏற்படும் பயங்கரவாதத்தை எடுத்துக் கொள்ளுங்கள். இது குறித்த ஒரு பகுப்பாய்வினை மேற்கொண்டால், அது அரசியல் இயல்புடையவை என்று நமக்கு புரிந்துக் கொள்ளலாம். மதத்திலிருந்து பிறந்த சில சிறிய பயங்கரவாதத்தினையும் நமக்கு பார்க்க முடியும். சமூக அமைப்புகளுக்கு எதிராக வெறுப்பினை உருவாக்குதல், நடைமுறையிலுள்ள கலாச்சாரங்களுக்கு எதிராக சிந்தனைகளை உருவாக்குதல் போன்றவை நிகழ்கிறது. அதனை பொதுவாக அராஜகவாத மற்றும் பைத்தியக்காரத்தனமான செயல்கள் என கூறலாம். மேலாதிக்கத்திற்காக போராடுகின்ற மா.ஃ.பியா (Mafia's) போராட்டங்களும் ஒரு வகையில் பயங்கரவாதம் எனலாம். ஒரு சங்கத்தைச் சார்ந்தவர்கள் இரண்டாக பிரிந்து ஒன்றுக் கொன்று மோதிக்கொள்கின்றனர். வெளிப்படையாக கூறினால், இந்த பயங்கரவாதம் என்று அழைக்கப்படும் இத்தகைய வன்முறைகளைக் குறித்து நாம் ஆராய்ந்து கொண்டால், அதன் பின்னால் நின்று செயல்படுவது அதாவது அதன் உண்மையான கையாளுதலும் சுரண்டலும் முஸ்லீம்கள் அல்ல என்றும் பெரும்பாலும் மத அமைப்பின் ஆடையணிந்த அரசியல் சக்திகள்தான் என்றும் பகுத்தறிந்து விடலாம்.

காஷ்மீரில் புல்வாமாவில் இந்தியன் ராணுவபடைக்கு எதிராக, பிப்ரவரி 14, 2019 வியாழக்கிழமையன்று நடந்த தற்கொலைத் தாக்குதல், இந்தியாவிற்கும் பாக்கிஸ்தானுக்கும் இடையிலான பதட்டத்தை மேலும் புதுப்பித்துள்ளது. இந்த தாக்குதலில் குறைந்தது 41 இந்தியன் வீரர்கள் உயிரிழந்துள்ளனர். தனது அண்டை நாடாகிய பாக்கிஸ்தானை தனிமைப்படுத்த பலதரப்பட்ட இராஜ்யதந்திர முயற்சிகள் மற்றும் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். அதை தொடர்ந்து பிப்ரவரி 18 ஞாயிற்றுக்கிழமையன்று இது நாட்டின் ஒரு தேசிய சோகமாக மாறியுள்ளது என்று இந்தியன் பிரதமர் நரேந்திர மோதி குறிப்பிட்டுள்ளார். **"உங்கள் இதயத்தைத் தழுவிய இந்த நெருப்பு என்னுடைய இதயத்தையும் தழுவியிருக்கின்றது" மக்கள் திரண்டு வந்த ஒரு**

**கூட்டத்தில்வைத்து அவர் இந்த அறிக்கையினை விடுத்திருக்கின்றார். பின்னர் அவர் மிக உறுதியாக கூறினார். "இந்தியரின் இரத்தம் கொதிக்கிறது"**

சோஷியல் நெட்வொர்க் மற்றும் அரசாங்கத்துடன் நெருக்கமாகயிருக்கும் டி.வி சானல்களும் பழிவாங்குவதற்காக புரளி எழுப்பினார்கள். இந்தியன் பிரதமரைப் பெறுத்த வரையில் இந்த தருணம் மிக முக்கியமானதாகும். 2008 நவம்பர் மாதம் மும்பையில் நிகழ்த பயங்கரவாதாக்குதலில் 174-பேர்கள் உயிரிழந்தனர். இது, அதற்கு பின் நிகழ்ந்த மிக பெரிய உணர்ச்சிவசமான ஒன்றாகும். அரசியல் எதிர்காலத்தை பொறுத்தவரையில் இந்த நிமிடம் மிக முக்கியத்துவமனாதாகும். ஏப்பிரல், மேய் மாதங்களில் தேர்தல் நடைபெற உள்ளது. இரு நாடுகளும் ஆலோசனைக்காக அந்தந்த நாட்டு தூதர்களை (Ambassador) திரும்ப அழைத்தனர். இஸ்லாமிய பயங்கரவாத கூட்டத்தில் பட்ட ஜெய்ஷெ முஹம்மதுக்கு இடம் மற்றும் வசதியினை பாக்கிஸ்தான் அளித்துவருவதாக டெல்லி பாக்கிஸ்தான் மீது குற்றச்சாடை எழுப்பியது. 2014 பிப்ரவரி 14 –ம் தேதியன்று அவர்கள் அந்த வன்முறையின் பொறுப்பேற்றனர்.

புல்வாமா குண்டுவெடிப்பு தொடர்பாக இந்தியாவுடன் ஒத்துழைக்க தயாராக இருப்பதாக பாக்கிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் கூறினார். இதன் பெயரில் எங்கள் நாடு தாக்கப்பட்டால் பதிலடிப்போம் என்றும் உறுதியாக கூறினார். கார் குண்டுவெடிப்புக்கு பயன்படுத்திய 350 கிலோ வெடிபொருள் பாக்கிஸ்தானிலிருந்து வந்ததா, இல்லையா என்பது புலனாய்வாளர்கள் இன்னும் கண்டுபிடிக்கவில்லை

நான் படித்து புரிந்து கொண்டதன் படி கூறினால் அதாவது, இந்தியாவுக்கும் பாக்கிஸ்தனுக்கும் இடையே, காஷ்மீர் எப்போதும் பிரச்சனையினை சந்தித்து கொண்டிருந்தது. அதனால் தான் இந்தியாவுக்கு கீழ் இருக்கும் காஷ்மீரில் எதுவொன்று நிகழ்தாலும் பாக்கிஸ்தான் மீதும் குற்றம் சாட்டுகின்றனர். காஷ்மீரை சரியான முறையில் நிர்வகிக்க முடியாத இந்தியாவின் பலி ஆடாக பாக்கிஸ்தான் மாறியுள்ளது. எனது கருத்து என்னவென்றால், இந்தியா பாக்கிஸ்தானை குறிவைக்கிறது. பிரச்சனைகளுக்கு சரியான முறையில் தீர்வை காண்பதற்கான விருப்பம் இந்தியாவுக்கு இல்லை. காஷ்மீரில் நிகழும்

ஒவ்வொன்றுக்கும் இந்தியா பாக்கிஸ்தான் மீது குற்றம் சாட்ட முயற்சிக்கின்றது. காஷ்மீரில் நடக்கும் அனைத்து குழப்பங்களும் வெளிசக்திகள் மூலமாகும் என்றும் அது எங்கள் தவறல்ல என்றும் இந்தியா அரசு கூறுகின்றது.

என்னைப் பொறுத்த வரையில் நான் கூற விரும்புகின்றேன். இந்த இரு நாடுகளுக்கும் இடையிலான தற்போதைய மோதலைத் தவிர்க்க வேண்டும். சற்று நேரம் எடுத்தாவது புல்வாமா தாக்குதலுக்குப் பின்னிலிருக்கும் அனைத்து ஆதாரங்களையும் சேகரிக்க வேண்டும். பின்னர் உண்மையினை இந்திய மக்களுக்கும் உலகமக்களுக்கும் அவர்கள் வெளிப்படுத்தட்டும். உண்மையில் இது எல்லையில் உள்ள ஒரு குழுவினரின் வேலை, தாக்குதலை நடத்தியவர்களுடன் இணைந்து அவர்கள் செயல்படுகின்றனர். அவர்கள் பாக்கிஸ்தானிகள் அல்ல. உண்மையில் அவர்கள் இந்தியர்கள்தான் என்பதையும் காட்ட முடியும். மட்டுமல்ல தாக்குதலில் ஈடுபட்டவர்களில் ஒருவர் அத்தாக்குதலுக்கு முன்பு ஒரு வீடியோவை வெளியிட்டார். இது குறித்த ஒரு ஆய்வினை மேற்கொணடதிலிருந்து எனக்கு புரியவந்தது, அதாவது யார் இந்த நபர்கள் என்று நமக்கு பகுத்தறிந்திட முடியும்! ஆனால் அவர்களுடன் எந்த தொடர்பும் இல்லை என்று இந்தியா கூறுகின்றது. ஆனால் அதை நிருபிக்க இந்திய அரசு முன் வரவேண்டும்.

இந்த தாக்குதலுக்குப் பிறகு, எந்தவிதமான கலந்தாலோசனையும் இல்லாமல் இந்தியா இரண்டு போர் விமானங்களை பாக்கிஸ்தான் பிரதேசத்திற்கு அனுப்பியது. இது குறித்து நாங்கள் வருந்துகின்றோம்.

நான் விரும்புவது, அதாவது அமைதியினை விரும்பும் எல்லா மக்களும் ஆசைப்படுவது இந்தியாவும் பாக்கிஸ்தானும் ஒரு சமரசத்தில் ஏற்பட வேண்டும். பின்னர் நிம்மதியாக வாழ வேண்டும். ஒவ்வொருவருடைய உரிமைகளையும் மதித்தும் தங்களது பிரதேசங்களை கட்டி காத்தும் ஒற்றுமையுடன் வாழ வேண்டும். ஒரு நபருடையவோ ஒரு குழுவினுடையவே தவறான செயல்கள் மூலம் ஒரு அரசாங்கத்தின் மீது குற்றம் சாட்டுவது சரியான முறையல்ல. எனவே, இந்தியா- பாக்கிஸ்தான் மோதலைத் தவிர்க்க, அவர்களுக்கு இடையே ஒரு நல்லுறவை மீட்டெடுக்க வேண்டும்.

இந்த இரு நாடுகளைக் குறித்து நாம் ஆராய்ந்து கொண்டால், இந்த இரு நாடுகளும் பொருளாதார துறையில் ஒரேநிலையிலான முன்னேற்றத்தை அடைந்துள்ளது எனபதை நமக்கு புரிந்துக் கொள்ளலாம். அத்தோடு இந்த இரு நாடுகளும் தங்கள் மக்களின் உள்கட்டமைப்பு மற்றும் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்த பெரும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர் என்பதையும் உணர முடியும், இந்த இரு நாடுகளுக்கும் இடையிலான பொதுவான நிலை இது தான். எனவே, முன்னேற்றத்திற்கு தீங்கு விளைவிக்கும் தற்போதுள்ள மோதல்களுக்கு முற்றுபுள்ளி வைக்கவேண்டும்.

தனிப்பட்ட முறையில் இந்நூற்றாண்டின் கலீ∵.பத்துல்லாஹ் என்ற முறையில் இந்த நிலைமைக்கு நியாயமான தீர்வு கூறவேண்டும். இந்த நிலைமை வந்தடைவதற்கு காரணம் இந்தியப் பிரதமர்தான். அதற்கு மற்றவர்களையோ அல்லது பிற நாடுகளையோ நாம் குறை சொல்ல முடியாது. பாக்கிஸ்தானைப் பொறுத்தவரையில், பாக்கிஸ்தான் பிரதமர் இம்ரான்கான், பாக்கிஸ்தானில் நிலவுகின்ற பிரச்சனைகள் என்ன என்பதைக் குறித்து புரிய வேண்டும். ஒருவருக்கு தனது நம்பிக்கையியை தேர்வு செய்வதற்கான உரிமை உண்டு. அந்த உரிமை ஒவ்வொரு நபருக்கும் உண்டு. நம்பிக்கையியை ஏற்றுக் கொள்வதற்கு எவர் ஒருவரையும் கட்டாயப்படுத்த முடியாது. அமைதி, சகிப்புத்தன்மை மற்றும் சுதந்திரம் ஆகியவற்றுடன் தனது நம்பிக்கையினை கடைப்பிடிக்க ஒவ்வொரு நபருக்கும் உரிமை உண்டு. மற்றொருவரை, அதாவது பிற முஸ்லீம் பிரிவினர்களை இஸ்லாமியரல்லாதவர்கள் என்று அறிக்கை விடுவித்து நாட்டில் குழப்பங்களை உருவாக்கும் முல்லாக்கள் இருக்க கூடாது. மற்றொருவரை முஸ்லீம் அல்ல என்று கூறுவதற்கான உரிமை எவருக்கும் இல்லை.

ஒருநபரின் நம்பிக்கையினைக் குறித்து தீர்ப்பு கூறுவதற்கான உரிமை எவருக்கும் இல்லை. அந்த உரிமை எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்கு மடடுமே உள்ளது. 1974- ம் ஆண்டு முதல் அஹ்மதியா முஸ்லீம்கள், முஸ்லீம்கள் அல்ல என்று அறிவிக்க நாடாளுமன்றத்தில் சட்டங்களை அவர்கள் இயற்றியுள்ளனர். ஷரி-அத்தின் சட்டங்களின் வரம்பை அவர்கள் மீறிக் கொண்டனர். ஒருவருக்கு தனது நம்பிக்கையை தேர்வு செய்வதற்கான சுதந்திரம்

மற்றும் அதிகாரத்தை ஷரி – அத் வழங்கியிருக்க, பிறரின் நம்பிக்கையின் மீது தீர்ப்பு கூற அவர்கள் தைரியம் காட்டுகின்றனர்." நாங்கள் முஸ்லீம்கள் என்றும் லா இலாஹா இல்லல்லாஹ் முஹம்மது ரசூலுல்லாஹ் என்ற ஷாஹாதாவில் உறுதியாக நம்பிக்கை கொள்கிறோம் என்றும் அஹமதிகள் பல ஆண்டுகளாக சத்தமாகவும் தெளிவாகவும் குரலிடுகின்றார்கள்.

பாக்கிஸ்தான் நாடு என்பது அஹ்மதி முஸ்லீம்களின் தீவிர பங்களிப்புடன்தான் உருவாக்கப்பட்டது. மேலும், பாக்கிஸ்தான் உருவாகிய பிறகு, அஹ்மதிகளுக்கு எதிராக அவர்கள் இழிவான மற்றும் இஸ்லாமிற்கு சேராதவகையில் செயல்பட்டார்கள். இஸ்லாமிய வழிபாடுகளைக் கடைப்படிப்பதற்கும், அமைதியாக வாழ்வதற்குமான அவர்களின் உரிமைகளை பறித்துக் கொண்டார்கள். அல்லாஹ் பார்வையற்றவனோ, காது கேளாதவனோ அல்ல. நிச்சயமாக அவன் தனது அடியார்களின் கண்ணீர் மற்றும் பிரர்த்தனையினை காண்பவனும் கேட்பவனுமாகயிருக்கின்றான். அது சுன்னி ஆகட்டும், அஹ்மதி ஆகட்டும், அல்லது மற்றேதேனும் முஸ்லீம் அமைப்புகள் ஆகட்டும், இன்று அவர்கள் பாக்கிஸ்தானில் அமைதியுடன் வாழ முடியாமல் இருப்பதற்கு காரணம் அவர்கள் தங்களது சொந்த மக்களுக்கு எதிராக, குறிப்பாக அஹமதியா முஸ்லீம்கள் மற்றும் இஸ்லாமிய பிற அமைப்பை சார்ந்த சிறு பான்மையினருக்கு எதிராக செய்த அநீதிகளால்தான். இந்த உலகில் அனைவருக்கும் ஒரு இடம் உண்டு. இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்ட வரம்புகளை யாரேனும் மீறினால், அவரை தண்டிப்பது அல்லாஹ் ஒருவனே தான், அதை மனிதன் செய்யக் கூடாது. ஏனெனில் மக்களின் நம்பிக்கையின் மீதான தீர்ப்பு கூறவதற்கான அனுமதியினை அல்லாஹ்விடமிருந்து மனிதன் பெறவில்லை.

**பாக்கிஸ்தானே! நீங்கள் கூறுவது போன்று அஹமதி முஸ்லீம்கள், முஸ்லீம்கள் அல்ல என்றால் அவர்களை அவர்களின் வழிக்கு விட்டு விடுங்கள். அவர்களிடம் என்ன செய்ய வேண்டும் என்பதைக் குறித்து அல்லாஹ் மிக நன்கு அறிபவனாகயிருக்கின்றான். அதனால்தான் இஸ்லாமிய போதனைகளை நவீகரிபதற்காக, சீரமைப்பதற்காக, தூய்மைப்படுத்துவதற்காக, அல்லாஹ் தனது கலீ·.பத்துல்லாஹ்வை இந்நூற்றாண்டில் எழுப்பியிருக்கின்றான். அவனது**

**அங்கீகாரம் பெற்ற ஒரு ஜமா அத்தினை அவன் வழங்கியிருக்கின்றான். அதுவாயிலாக அவன் ஒவ்வொருக்கும் ஒரு வாய்ப்பினை அளித்திருக்கின்றான். உங்களுக்குகூட இது ஒரு வாய்ப்பாக இருக்கின்றது.** ஆகவே நீங்கள் சுயம் கடந்த கால தவறுகளை சரிசெய்து, ஒரு சீர்திருத்ததிற்கு தயாராகிவிடுங்கள். நேரத்தை இழந்து விடாதீர்கள். அஹமதி முஸ்லீம்களின் உரிமைகளை திருப்பிக் கொடுங்கள். அமைதியுடன் அவர்கள் தங்களது இஸ்லாமிய பாதையினை பின்பற்றுவதற்கு அனுமதித்துக் கொள்ளுங்கள் அதுவழியாக உங்கள் மக்கள் நிம்மதியாக இருந்தால், அல்லாஹ் உங்களைப் பற்றி மகிழ்ச்சியடைந்தால், அந்நிலையில் அல்லாஹ் உங்களுக்காக இரட்சிப்பின் கதவைத் திறந்து வழங்குவான். அல்லாஹ்வின் தீர்மானப்படி உங்களிடம் ஒற்றுமை மற்றும் நல்லிணக்கம் வந்தடையும். அந்நிலையில் இந்தியாவிடவும் பிற நாடுகளிடமும் மிக சிறந்த முறையில் நடந்துக் கொள்ள உங்களுக்கு முடிந்துவிடும். உங்கள் நாட்டைசார்ந்தவர்களிடம் நீங்கள் நல்ல முறையில் செயல்படுங்கள். நீங்கள் இஸ்லாமிய அரசாங்கமல்ல என்பதால் மக்கள் நம்பிக்கையில் தலையிடாமல் இருங்கள். நீங்கள் உண்மையான ஒரு இஸ்லாமிய அரசாகயிருந்தால், அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆரேபியாவில் ஆட்சி செய்ததைப் போன்று நீங்கள் ஆட்சிச் செய்திருப்பீர்கள். இஸ்லாமிய மார்க்கத்தை ஏற்றுக் கொள்ள எவரையும் கட்டாயப்படுத்தாமல் நீங்கள் ஆட்சி செய்திருப்பீர்கள். அவரது அரசியல் உண்மையான அரசியலாக இருந்தது. அங்கு ஒவ்வொருவருக்கும் அவர்களின் உரிமைகளுக்கு ஏற்றவாறு வாழ்வதற்கான அனுமதி இருந்தது.

இப்போது துரதிர்ஷ்டவசமாக நீங்கள் உங்கள் சகோதர-சகோதரிகளுக்கும், முஸ்லீம் குழந்தைகளுக்கும் எதிராகத்தான் போராடிக்கொண்டிருக்கிறீர்கள். நிச்சயமாக இது நல்ல காரியமல்ல. அநீதியான முறையில் ஆட்சி செய்யும் எந்த நாட்டினையும் அல்லாஹ் அங்கீகரிப்பதில்லை. உங்களை பொறுத்தவரையில் நேரம் முடிந்துக்கொள்வதற்கு முன்பு நீங்கள் கண் விழித்து எழும்பிக் கொள்ளுங்கள். மோதியின் விருப்பம் என்பது பாரதம் முழுமையாக ஒரு ஹிந்து நாடாக மாறவேண்டும் என்பதாகும். நமது முஸ்லீம் சகோதர்களும் சகோதரிகளும் தங்களது நம்பிக்கையின் பெயரில் மிக மேசமான விளைவுகளை சந்தித்து வருவதைப் பற்றி உங்களின் கருத்து என்ன? நமது இஸ்லாமை அவர்கள் பயங்கரவாதம் என்று நினைகின்றார்கள். அதை நீங்கள் கண்டு

கொள்ளவில்லையா? அதைபோன்று பாலஸ்தீனில் நமது சகோதர சகோதரிகளை, குழந்தைகளை எதற்கு இன்னும் அவர்களெல்லாம் எந்த அளவு துன்புறுத்தல்களுக்கு ஆளாகி வருகின்றனர் என்பதை குறித்து நீங்கள் சிந்திக்கவில்லையா? இக்கூறியவை அனைத்தும் மிக மிக சிறிய உதாரணங்கள் ஆகும். மேலும் எவ்வளவோ கூறயிருக்கின்றது.

முஸ்லீம் சகோதரர்களே! விழித்துவிடுங்கள். இல்லாஹ்வுக்காகவும் அவனது தூதர் (ஸல்) அவர்களுக்காகவும் நாம் ஒன்றிணைத்து விடுவோம். நேரம் இதுவே ஆகும். இஸ்லாமிற்கு மாறான எல்லா செயல்பாடுகளையும் தூக்கி வீசிக்கொள்ளுங்கள். நீங்கள் ஒருங்கிணைந்து முன்செல்லுங்கள். நீதிபூர்வமாக செயல்படுங்கள். அந்நிலையில் உங்களுடன் அல்லாஹ்வையும் நீங்கள் கண்டு கொள்வீர்கள். சட்டத்திற்கு உட்பட்ட எல்லா காரியங்களுக்கும் அவன் உங்களுக்க ஆதராவாக இருப்பான். நீங்கள் ஒரு அநீதியை சந்திக்க நேர்ந்தால் அவன் உங்களுக்கு உதவி புரிய விரைந்து வருவான். ஆனால் நீங்கள் இஸ்லாமில் பரிபூரணமாக நேர்மையுடன் இருக்கவேண்டும். இஸ்லாம் நமது மார்க்கமாகிறது. இஸ்லாம், அது மட்டுமே நமக்கு உண்மையான வாழ்க்கை வழியினை வழங்குகின்றது. மிக விரைவில் நீங்கள் உங்களை சுயம் சீரமைத்துக் கொள்ளுங்கள். அல்லாமல் இருந்தால் இரத்தகளரி மற்றும் போர்கள் நிகழ்ந்துவிடும். அநேக மக்கள் தங்களது உயிரினை இழப்பார்கள். உங்களின் வாழ்க்கையினை நீங்கள் அல்லாஹ்விடம் பாதுகாப்புகாக ஒப்படைத்துவிடுங்கள். நீங்கள் நேர்மையுடனும் நம்பகத்தன்மையுடனும் இருங்கள். உங்களின் முஸ்லீம் சகோதர சகோதரிகளிடம் நீங்கள் நீதிபூர்வமாகயிருங்கள். அவர்களின் நம்பிக்கையினைக் குறித்து நீங்கள் தீர்ப்பு கூறமலிருங்கள். நல்லவர்களாகயிருங்கள். இரக்கமுள்ளவர்களாகயிருங்கள். பிற நம்பிக்கையுடன் வாழும் மக்களுடன் கருணையுடன் இருங்கள். இரக்கமும், கருணையும் மனிதாபிமானத்தின் அடையாளமாகிறது. இவை இரண்டும் இறைவன் மனிதனுக்குள் வைத்தவாறு படைத்திருக்கின்றான். ஆகவே பிற மக்களுடன் இரக்கத்துடன் இருங்கள் அப்போது இறைவன் உங்களிடமும் இரக்கம் காட்டுவான். பயங்கரவாதத்திற்கு எதிராக போராடுங்கள் பயங்கரவாதத்திற்கு எதிராக போராடுவதற்கு பிறருக்கு உதவிபுரியுங்கள். ஏனெனில்

பயங்கரவாதத்திற்கு நம்பிக்கையுமில்லை. சட்டவுமில்லை. பயங்கரவாதம் அதன் வழியிலான அனைத்தையும் அழித்து விடுகிறது.

இஸ்லாமை மீண்டும் உருவாக்க அல்லாஹ் நமக்கு உதவிபுரிவானாக! எல்லா நிலையிலும் நன்மைகளை விளைவிக்கும் இஸ்லாம்! வாழ்க்கையில் நன்மைகளை சேர்க்கும் இஸ்லாம்! பொறுமையின் இஸ்லாம், அது நம் இதயத்துடன் என்றென்றும் நெருங்கியிருக்கட்டும். இன்ஷா அல்லாஹ்! ஆமீன். எல்லா வகையான பயங்கரவாதத்திற்கும் எதிராக போரடுவதற்கு அல்லாஹ் நமக்கு துணை புரியட்டும்! இஸ்லாமின் பெயரினையும் மகத்துவத்தையும் அல்லாஹ் பாதுகாக்கட்டும். தவறான மற்றும் கடுமையான குற்றச்சாட்டுகளிலிருந்து இஸ்லாமை அல்லாஹ் பாதுகாக்கட்டும் இன்ஷா அல்லாஹ். ஆமீன்

Translated by:

*Naib Amir - Azim Ahmad*
*7339689239*

## ISSUED BY

**R. JAMALUDDIN RAOTHER SAHIB**
Amir Kerala South Zone, India
Kerala contact
No: 9447001832

**SIRAJ DEEN SAHIB**
Amir Tamilnadu state, India
Tamilnadu Contact
No: 7502272774

**PUBLISHED BY:**
**JAMAAT-UL-SAHIH-AL-ISLAM**
**KALIAKKAVILAI BRANCH**
**(TAMILNADU AND KERALA BORDER)**
**Ph No: 9789180817, 9171977109**